நவம்பர் 2, 3–ந் தேதி அன்று மெட்ரோ ரெயில் சேவை இரவு 11 மணி வரை நீட்டிப்பு

சென்னை,அக்.31–

தீபாவளிக்காக வெளியூர் செல்லும் பயணிகளின் வசதியாக நவம்பர் 2, 3 ஆகிய தேதிகளில் மெட்ரோ ரெயில் சேவை இரவு 11 மணிவரை நீட்டிக்கப்படும் என்று மெட்ரோ நிர்வாகம் அறிவித்துள்ளது.

சென்னை மெட்ரோ ரெயிலில் பயணம் செய்வோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தற்போது சென்னை சென்ட்ரலில் இருந்து எழும்பூர், அண்ணாநகர், கோயம்பேடு, வடபழனி வழியாக விமான நிலையம் வரை ஒருவழி தடத்தில் மெட்ரோ ரெயில் செல்கிறது. இதுதவிர தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்.ல் இருந்து விமான நிலையத்துக்கும் மெட்ரோ ரெயில் போகிறது.

மெட்ரோ ரெயிலில் விரைவாக செல்லலாம். எனவே இதில் ஏராளமானோர் விரும்பி பயணம் செய்கிறார்கள். தீபாவளி பண்டிகை நெருங்குவதால் மெட்ரோ ரெயிலில் பயணம் செய்வோர் எண்ணிக்கை வழக்கத்தை விட அதிகமாக உள்ளது. தற்போது மெட்ரோ ரெயில் அதிகாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை இயக்கப்படுகிறது.

வருகிற நவம்பர் 2, 3 ஆகிய தேதிகளில் தீபாவளி விடுமுறைக்காக வெளியூர் செல்லும் பயணிகள் எண்ணிக்கை பலமடங்கு அதிகமாகும். எனவே வருகிற 2, 3 ஆகிய தேதிகளில் மெட்ரோ ரெயில் சேவை அதிகரிக்கப்படுகிறது. இதற்காக அதிக எண்ணிக்கையில் ரெயில்கள் விடப்படும். இந்த 2 நாட்களும் இரவு 11 மணி வரை மெட்ரோ ரெயில் சேவை நீடிக்கப்படும் என்று மெட்ரோ நிர்வாகம் அறிவித்துள்ளது.

ஆன்லைனில் மருந்து விற்பனைக்கு ஐகோர்ட் இடைக்கால தடை

சென்னை, அக்.31

ஆன்லைனில் மருந்துகள் விற்பனை செய்ய இடைக்கால தடை விதித்து சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

ஆன்லைனில் மருந்துகள் விற்பனை செய்ய தடை விதிக்க கோரி சென்னை ஐகோர்ட்டில் தமிழ்நாடு மருந்து வணிகர்கள் சங்கத்தின் சார்பில் வழக்கு தொடரப்பட்டது. அதில், பதிவு செய்யப்படாத நிறுவனங்கள், ஆன்லைன் மூலம் மருந்துகளை விற்பனை செய்யப்படுகிறது. டாக்டர்கள் வரும் மருந்து சீட்டு இல்லாமலேயே ஆன்லைன் மூலம் மருந்துக்கள் விற்பனை செய்யப்படுகிறது. இது சட்டப்படி குற்றமாகும்.

மேலும், காலாவதியான, போலியான, தவறான மருந்துகள் பொதுமக்களுக்கு விற்பனைச் செய்யப்படலாம். இதனால், மக்களின் ஆரோக்கியம் கடுமையாக பாதிக்கப்படும். ஆன்லைனின் மருந்துகள் வாங்குவதும் விற்பனை செய்வது என்பது பொதுமக்களின் உயிருக்கு ஆபத்தாகும். ஆன்லைனில் மருந்து விற்பனை செய்வது சட்டவிரோதமாகும். எனவே, இதற்கு தடை விதிக்க வேண்டும்' என்று கூறியிருந்தார்.

இந்த வழக்கை நீதிபதி ஆர். மகாதேவன் விசாரித்தார். பின்னர், ஆன்லைனில் மருந்துக்களை விற்பனை செய்ய இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டார்.

அயனாவரம் 11 வயது சிறுமிக்கு பாலியல் கொடுமை வழக்கில் சிபிஐ விசாரணை: கைதான 17 பேரின் மனு தள்ளுபடி

சென்னை, அக்.31–

அயனாவரம் சிறுமிக்கு நடந்த பாலியல் கொடுமை சம்பவம் எதிரொலியாக கைதானவர்கள் சி.பி.ஐ. விசாரணை கேட்டு தொடர்ந்த வழக்கு ஐகோர்ட்டில் தள்ளுபடி செய்யப்பட்டது.

இது பற்றிய விவரம் வருமாறு:–

சென்னை அயனாவரத்தில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வரும் 11 வயது மாற்றுத்திறனாளி சிறுமி பலரால் பாலியல் கொடுமைக்கு உள்ளானர்.

அந்த அடுக்குமாடி குடியிருப்பில் காவலாளியாகவும், லிப்ட் ஆப்ரேட்டர்களாகவும் வேலை பார்த்தவர்கள் உள்பட 17 பேர் அந்த சிறுமியை கடந்த 6 மாதங்களாக பாலியல் கொடுமை செய்துள்ளனர். இதனால் அந்த சிறுமி சோர்ந்த போன நிலையில் காணப்பட்டாள். அந்த சிறுமியிடம், அவளது அக்காள் விசாரித்தபோது தான் இந்த கொடூரம் வெளியில் வந்தது.

இதுகுறித்து அயனாவரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து 17 பேரையும் கைது செய்தனர். இந்த வழக்கு சென்னை மகளிர் கோர்ட்டில் விசாரிக்கப்பட்டு வருகிறது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோது, வழக்கின் குற்றப்பத்திரிகையின் நகலை குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டது. இதற்கிடையில், இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட சிலர், இந்த வழக்கை அயனாவரம் போலீசார் விசாரித்து நியாயமாக இருக்காது. அதனால், சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்ற வேண்டும் என்று கோரிக்கையுடன் ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்கை நீதிபதி ஏ.டி. ஜெகதீஷ் சந்திரா விசாரித்தார். அப்போது போலீஸ் தரப்பில் சிறப்பு வக்கீல் என்.ரமேஷ் ஆஜராகி, தமிழக போலீசார் இந்த வழக்கை நியாயமான, சட்டப்படியாகவும் விசாரித்து வருகின்றனர். அந்த விசாரணையில் உள்நோக்கம் உள்ளது என்றோ, தன்னை வேண்டுமென்றே போலீசார் உள்நோக்கத்துடன், தனிப்பட்ட பகையுடன் கைது செய்து விட்டனர் என்று மனுதாரர்கள் கூறவில்லை.

இந்த வழக்கின் விசாரணை விவர ஆவணத்தை (கேஸ் டைரியை) இந்த கோர்ட்டு ஆய்வு செய்யலாம் என்று வாதிட்டார். இதையடுத்து இந்த வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்து நீதிபதி ஏ.டி.ஜெகதீஷ்சந்திரா உத்தரவிட்டார். இந்தநிலையில் இந்த வழக்கின் தீர்ப்பை இன்று நீதிபதி பிறப்பித்தார். அதில் சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்ற வேண்டும் என்பதற்கு சரியான காரணங்களை மனுதாரர்கள் கூற வில்லை. அதனால் வழக்கை தள்ளுபடி செய்கிறேன் என்று உத்தரவிட்டார்.

தமிழ்நாடு அரசின் நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி, மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமனை சந்தித்து மும்பை – பெங்களூரு தொழில் வளாக சாலை விரிவாக்கத் திட்டத்தை கோயம்பத்தூர் வரை நீட்டிப்பு செய்ய கோரிக்கை மனுவினை அளித்தார்.

எஸ்பிஐ ஏடிஎம்மில் நாள் ஒன்றுக்கு எடுக்கும் பணத்தின் வரம்பு ரூ. 20 ஆயிரமாக குறைப்பு

சென்னை, அக்.31–

எஸ்பிஐ ஏடிஎம்மில் நாள் ஒன்றுக்கு எடுக்கப்படும் பணத்தின் உச்ச வரம்பு ரூ. 40 ஆயிரத்திலிருந்து பாதியாக குறைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் மிகப் பெரிய பொதுத்துறை வங்கியான எஸ்பிஐ தனது ஏடிஎம் பரிவர்த்தனை சேவையில் புதிய விதிமுறையை நிர்ணயித்துள்ளது. அதன்படி க்ளாசிக், மேஸ்ட்ரோ டெபிட் கார்ட் பயனர்கள் எஸ்பிஐ வங்கி ஏடிஎம்களில் நாள் ஒன்றுக்கு அதிகபட்ச தொகையாக ரூ.20 ஆயிரம் மட்டுமே எடுக்க முடியும். இந்த புதிய நடைமுறை இன்று முதல் அமலுக்கு வந்துள்ளது.

எனினும் இந்த வரம்பு மற்ற எஸ்பிஐ டெபிட் கார்ட் பயனர்களுக்கு பொருந்தாது என்றும் கோல்ட், பிளாட்டினம் டெபிட் கார்ட் பயனர்கள் நாள் ஒன்றுக்கு ரூ.50 ஆயிரம் முதல் ரூ.1 லட்சம் வரை எடுக்க முடியும் எனவும் எஸ்பிஐ வங்கி தெரிவித்துள்ளது.

இது குறித்து எஸ்பிஐ வங்கியின் மூத்த அதிகாரி கூறும்போது, "டிஜிட்டல், பணமில்லா பரிவர்த்தனையை ஊக்குவிப்பதற்காகவும் மோசடிகளைத் தவிர்ப்பதற்காகவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதிக பணம் எடுக்க விரும்பும் க்ளாசிக், மேஸ்ட்ரோ டெபிட் கார்ட் பயனர்கள் தங்கள் கார்டுகளை வங்கியில் கொடுத்துவிட்டு அதிகமான பணம் எடுப்பதற்கான வேறு கார்டுகளை பெற்றுக்கொள்ளலாம்" என்றார்.

எஸ்பிஐ வங்கியின் இந்த நடவடிக்கையால் இந்த பண்டிகை காலத்தில் 42 கோடி வாடிக்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2018 மார்ச் வரை எஸ்பிஐ வங்கி 39.1/2 கோடி வாடிக்கையாளார்களுக்கு டெபிட் கார்டுகளை வழங்கியுள்ளது. அதில் சுமார் 26 கோடி பேர் டெபிட் கார்டுகளை தொடர்ந்து பயன்படுத்தி வருகின்றனர். பெருநகரங்கள், நகரங்களில் எஸ்பிஐ கணக்கு வைத்திருப்பவர்கள் குறைந்தபட்ச இருப்புத் தொகையாக வங்கியில் ரூ.3000 ஆயிரம் வைத்திருக்க வேண்டும். இல்லையென்றால் அபராதம் விதிக்கப்படும். எஸ்பிஐ கார்டை பயன்படுத்தி மாதத்திற்கு 5 முறை மட்டுமே ஏடிஎம்களில் பணம் எடுக்க முடியும். அதேபோல் எஸ்பிஐ கார்டை பயன்படுத்தி மற்ற வங்கியின் ஏடிஎம்களில் மாதத்திற்கு 3 முறை மட்டுமே பணம் எடுக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

நாளை வடகிழக்கு பருவமழை துவங்கும்: வானிலை மையம் நம்பிக்கை

சென்னை,அக்.31–

அடுத்த 24 மணி நேரத்தில் கடலோர மாவட்டங்களில் வடகிழக்கு பருவமழை துவங்கும் என சென்னை வானிலை மையம் கூறியுள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை மைய இயக்குநர் பாலச்சந்திரன் கூறியதாவது:–

தென்மேற்கு மற்றும் மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை நிலவுகிறது. அதே பகுதிகளில் வளிமண்டலத்தில் மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதனால், அடுத்த 24 மணி நேரத்தில், கடலோர மாவட்டங்களில் வடகிழக்கு பருவமழை துவங்கும்.

பின்னர் படிப்படியாக, உள்மாவட்டங்கள், கேரளா மற்றும் தெற்கு கர்நாடகாவில் வடகிழக்கு பருவமழை துவங்கும். கடந்த 24 மணி நேரத்தில் எண்ணூர், மகாபலிபுரத்தில் 5 செ.மீ., மழை பதிவாகியுள்ளது.

அடுத்த 24 மணி நேரத்தில், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பரவலாக மழை பெய்யக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிளில் இடைவெளி விட்டு மழை பெய்யலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

ரபேல் ஒப்பந்த விபரங்களை 10 நாளில் தாக்கல் செய்ய மத்திய அரசுக்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவு

புதுடெல்லி,அக்.31–

ரபேல் விமானங்களின் விலை, ஒப்பந்தம் தொடர்பான முக்கிய விபரங்களை 10 நாட்களுக்குள் தாக்கல் செய்ய மத்திய அரசுக்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது.

ரபேல் போர் விமானங்கள் வாங்குவது தொடர்பான ஒப்பந்தத்தில் முறைகேடு நடந்துள்ளதாகவும், இது தொடர்பாக சிபிஐ விசாரிக்க வேண்டும் எனவும் கோரி முன்னாள் மத்திய அமைச்சர்கள் யஷ்வந்த் சின்கா, அருண் சோரி மற்றும் பிஷாந்த் பூஷண் ஆகியோர் சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுவை இன்று விசாரித்த சுப்ரீம் கோர்ட், 10 நாட்களில் விபரங்களை தாக்கல் செய்ய மத்திய அரசுக்கு உத்தரவிட்டுள்ளது. சுப்ரீம் கோர்ட் பிறப்பித்துள்ள உத்தரவில், ரபேல் போர் விமான விலை தொடர்பான விபரங்களையும், ஒப்பந்தம் தொடர்பான விபரங்களையும் சீலிட்ட கவரில் 10 நாட்களில் தாக்கல் செய்ய வேண்டும்.

ரபேல் ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்ட விபரங்களையும் பொது இணைய தளத்தில் வெளியிட வேண்டும். மனுதாரர்களுக்கும் ஒப்பந்தம் தொடர்பான விபரங்களை அளிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சவூதி அரேபிய மருத்துவமனைக்கு செவிலியர்கள் தேவை

சென்னை, அக். 31–

சவூதி அரேபிய அமைச்சகத்தின் கிங் பாஹத் மெடிக்கல் சிட்டி மருத்துவ மனையில் பணிபுரிவதற்கு 3 வருட பணி அனுபவத்துடன் 34வயதிற்கு உட்பட்ட பி.எஸ்.சி., எம்.எஸ்.சி., பி.எச்.டி தேர்ச்சி பெற்ற பெண் செவிலியர்களுக்கான நேர்முகத் தேர்வு 19.11.2018 முதல் 23.11.2018 வரை புதுடெல்லியில் நடைபெற உள்ளது.

தேர்ந்தெடுக்கப்படும் எம்.எஸ்.சி செவிலியர்களுக்கு ரூ.90,000 மற்றும் பி.எஸ்.சி செவிலியர்களுக்கு ரூ.80,000 அனுபவத்திற்கேற்றவாறு மாத ஊதியமும், இலவச விமான டிக்கெட், உணவு, இருப்பிடம், விசா, மருத்துவச் சலுகை, போக்குவரத்து, 35 நாட்கள் சம்பளத்துடன் கூடிய வருடாந்திர விடுப்பு மற்றும் சவூதி அரேபிய அமைச்சகத்தின் சட்ட திட்டத்திற்கு உட்பட்ட இதர சலுகைகள் வழங்கப்படும்.

எனவே, தகுதியுள்ள செவிலியர்கள் தங்களின் சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்வித்தகுதி, அனுபவம், பாஸ்போர்ட் மற்றும் ஆதார் ஆகியவற்றின் நகல்கள் மற்றும் வெள்ளைநிறப் பின்னணியில் எடுக்கப்பட்ட புகைப்படத்துடன் ovemclmohsa2018@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 9.11.2018–க்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

NOTICE

SUNDARAM MUTUAL

Half-Yearly unaudited financial results of the schemes of Sundaram Mutual Fund

Notice is hereby given that, in accordance with Regulation 59 of SEBI (Mutual Funds) Regulations, 1996, the unaudited financial results of the schemes of Sundaram Mutual Fund for the half year ended September 30, 2018 have been hosted on the website of the fund **www.sundarammutual.com.**

Investors may accordingly view or download the results from the website.

For **Sundaram Asset Management Company Limited**
P. Sundararajan
Secretary & Compliance Officer

Place: Chennai
Date: October 31, 2018

For more information please contact:
Sundaram Asset Management Company Ltd
(Investment Manager to Sundaram Mutual Fund)
CIN: U93090TN1996PLC034615

Corporate Office: 1st & 2nd Floor, Sundaram Towers, 46, Whites Road, Royapettah, Chennai-14.
Contact No. (India) 1860 425 7237, (NRI) +91 44 2831 0301
Fax: +91 44 2841 8108. www.sundarammutual.com
Regd. Office: No. 21, Patullos Road, Chennai 600 002.

Mutual Fund investments are subject to market risks, read all scheme related documents carefully.

TAKE® Enabling Business Efficiencies

டேக் சொல்யூஷன்ஸ் லிட்.,
CIN: L63090TN2000PLC046338
பதிவு அலுவலகம் : எண். 27, டேங்க் பண்ட் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034, www.takesolutions.com

செப்டம்பர் 30, 2018ல் முடிந்த காலாண்டு & அரையாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கையின் சுருக்கம்

(₹ லட்சத்தில், ஒரு பங்கு டேட்டா தவிர)

வ. எண்.	விபரங்கள்	30.09.2018 அன்று முடிந்த 3 மாதங்கள் (தணிக்கை செய்யப்படாதது)	30.09.2018 அன்று முடிந்த 6 மாதங்கள் (தணிக்கை செய்யப்படாதது)	30.09.2017 அன்று முடிந்த 3 மாதங்கள் (தணிக்கை செய்யப்படாதது)
1	செயல்பாடுகளின் மூலம் வருமானம்	51,587.95	98,342.03	37,092.84
2	சாதாரண நடவடிக்கைகளிலிருந்து லாபம்/(நஷ்டம்) வரிக்கு முன்பு	7,378.13	13,720.83	4,226.57
3	சாதாரண நடவடிக்கைகளிலிருந்து லாபம்/(நஷ்டம்) வரிக்கு பின்பு	6,079.35	11,496.20	3,669.34
4	சமபங்கு மூலதனம்	1,460.42	1,460.42	1,310.71
5	மொத்த விரிவான வருமானம்	10,525.23	20,251.01	3,800.71
6	ஒரு பங்கு ஈட்டிய வருவாய் (ஆவண மதிப்பு ஒவ்வொன்றும் ₹1/- வருடாந்திரமல்ல)			
	(அ) அடிப்படை	4.12	7.78	2.85
	(ஆ) மாற்றியமைக்கப்பட்ட நிலையில்	4.11	7.76	2.85
	டேக் சொல்யூஷன்ஸ் லிமிடெட்டின் நிதிநிலை முடிவுகள் (தனித்தன்மையான தகவல்)			
1	செயல்பாடுகளின் மூலம் வருமானம்	24.66	64.85	75.77
2	இதர வருமானம்	3,428.89	6,065.64	982.26
3	வரிக்கு முன் லாபம்/(நஷ்டம்)	2,949.85	5,289.86	472.25
4	வரிக்கு பின் லாபம்/(நஷ்டம்)	2,738.48	4,954.52	521.37

குறிப்பு: 1. டேக் சொல்யூஷன்ஸ் லிமிடெட்டை ('நிறுவனம்') பொறுத்தமட்டில், 30 செப்டம்பர் 2018 அன்று முடிந்த காலாண்டு மற்றும் அரையாண்டிற்கான, தணிக்கை செய்யப்படாத முழுமையான மற்றும் ஒருங்கிணைந்த முழுவடிவிலான நிதிநிலை முடிவுகள், தணிக்கை குழு மற்றும் இயக்குநர் குழுவினால், அக்டோபர் 30, 2018 அன்று நடைபெற்ற, அவரவர்களுக்குரிய கூட்டத்தில் முறையே மறு ஆய்வு செய்யப்பட்டு, ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட முடிவுகள், நிறுவனத்தின் சட்டப்பூர்வமான தணிக்கையாளர்களால், குறைந்தபட்ச ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. சட்டப்பூர்வமான தணிக்கையாளர்களின் அறிக்கைகள் தகுதி பெறாதவையாகும்.
2. இந்த நிதிநிலை முடிவுகள், கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 133ன் கீழ்வரும் செபி (பட்டியல் மற்றும் வெளியீடு குறித்தத் தேவைகள்) ஒழுங்குமுறை, 2015, விதிமுறை 33ன் உரிய விதிகள் மற்றும் ஜூலை 05, 2016 தேதியிட்ட செபி சுற்றறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட இந்திய கணக்கியல் தரநிலைகள் ('Ind AS')ன்படி தயாரிக்கப்பட்டுள்ளது.
3. பட்டியல் மற்றும் வெளியீடு குறித்தத் தேவைகள் தொடர்பாக, செபி (SEBI) அமைப்பு 2015ம் ஆண்டு வழங்கியுள்ள வழிகாட்டுதலில் உள்ள விதிமுறை எண் 33ன் படி, பங்குச் சந்தையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முழுவடிவிலான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் மேலே தரப்பட்டுள்ளது. முழுவடிவிலான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை www.nseindia.com மற்றும் www.bseindia.com என்ற பங்கு வர்த்தக இணையதளங்களிலும், www.takesolutions.com என்ற நிறுவன இணையதளத்திலும் காணலாம்.

இயக்குநர்கள் குழுவின் சார்பாக
ஒப்பம்/–
ஸ்ரீநிவாசன் H R
துணைத் தலைவர் & நிர்வாக இயக்குநர்

இடம் : மும்பை
தேதி : அக்டோபர் 30, 2018

INTEGRATED HITECH LTD
150/112, Cisons Complex,IIIrd Floor, Monteith Road, Egmore, Chennai - 600 008
Phone : 044 - 2851 4406/07 Fax : 044 - 28586599, Email : integrated@eth.net

Unaudited Financial Results for the Quarter ended 30th Sep 2018

(Rs. in lakhs)

Sl No.	Particulars	Quarter ending / Current Year ending	Year to date Figures / Previous Year ending	Corresponding 3 months ended in the previous year
		30.09.2018	31.03.2018	30.09.2017
		(Un-Audited)	(Audited)	(Un-Audited)
1.	Total Income from Operations	6.84	30.78	8.62
2.	Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional and / or Extraordinary items)	0.74	2.55	2.81
3.	Net Profit / (Loss) for the period before tax (after Exceptional and / or Extraordinary items)	0.74	2.55	2.81
4.	Net Profit / (Loss) for the period after tax (after Exceptional and/or Extraordinary items)	0.74	2.55	2.81
5.	Total Comprehensive Income for the period [Comprising Profit / (Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)]	0	0	0
6.	Equity Share Capital	1000.46	1000.46	1000.46
7.	Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet of the previous year	89.09	89.42	91.55
8.	Earnings Per Share (of Rs. 10 /- each) (for continuing and discontinued operations)			
	1.Basic	0.01	0.02	0.02
	2.Diluted	0	0	0

Notes:

a) The above is an extract of the detailed format of Quarterly / Annual Financial Results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing and Other Disclosure Requirements) Regulations, 2015.

b) The above results after a limited Review by the Statutory Auditors of the Company, were approved by the Board of Directors in the meeting held on 26/10/2018.

c) The Company derives income from a single segment Software Development and services.

By Order of the Board,
For Integrated Hitech Ltd.,
A.Gerald Ebenezer
Managing Director

Place : Chennai
Date : 30.10.2018

சாலைப் போக்குவரத்து நிறுவனம் பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை
பெருந்துறை, ஈரோடு – 638053

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.01/எரோபேரி–பெமகம/2018 ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள்.26.10.2018

சாலை போக்குவரத்து நிறுவனத்தின் சார்பாக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை, பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கீழ்க்கண்ட உபகரணங்கள் விநியோகம் செய்ய முதல்வர், சாபோநி – பெருந்துறை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, பெருந்துறை அவர்களால், தகுதி பெற்ற மருத்துவ உபகரணங்கள் உற்பத்தியாளர்கள் / அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தர்களிடமிருந்து 28.11.2018 முற்பகல் 10.00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். (Two cover system)

வ. எண்	மருத்துவ உபகரணங்களின் பெயர்	தேவையான எண்ணிக்கை	முன்வைப்பு தொகை	ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை
1.	Manual Microtome unit with all accessories	1 No.	7,500.00	1,770.00
2.	Ultrasound scan system with 2 probes (TVS & Convex) with all accessories	1 No.	9,000.00	1,770.00
3.	Phototherapy Unit (Whole Body UVA / UVB for Psoriasis / Vitiligo management)	1 No.	5,040.00	1,770.00
4.	Treadmill with all accessories	1 No.	4,650.00	885.00

1. ஒப்பந்தப்புள்ளி படிவம் கிடைக்கும் காலம் 01.11.2018 முதல் 27.11.2018 வரை
2. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள், நேரம் மற்றும் இடம் 28.11.2017 முற்பகல் 10.30 மணி, முதல்வர் அலுவலகம், பெருந்துறை

மேலும் ஒப்பந்தப்புள்ளிகளை www.tenders.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அவ்வாறு பதிவிறக்கம் செய்து அனுப்பப்படும். ஒப்பந்தப்புள்ளிகளுடன் ஒப்பந்தப்புள்ளி படிவத் தொகைக்கான வங்கி வரைவோலையை இணைத்து அனுப்பப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளியினை ஏவ்வித காரணமும் இன்றி நிராகரிக்க முதல்வர், பெமக அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு.

செ.ம.தொ.இ/4435/ஒப்பந்தப்புள்ளி/2018 **முதல்வர்**

ஈசாப் இந்தியா லிமிடெட்
CIN:L29299TN1987PLC058738
பதிவு அலுவலகம் : பிளாட் எண் 13, 3வது பிரதான சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை- 600 058.
தொ.பேசி எண். 044-4228 1100, இ-மெயில்: investor.relations@esab.co.in

செப்டம்பர் 30, 2018 வரை முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆறு மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

ரூ. லட்சத்தில் (EPS தவிர)

வ.எண்	விவரங்கள்	முடிவடைந்த காலாண்டு செப்டம்பர் 30, 2018 (தணிக்கை செய்யப்படாதது)	முடிவடைந்த காலாண்டு ஜூன் 30, 2018 (தணிக்கை செய்யப்படாதது)	முடிவடைந்த காலாண்டு செப்டம்பர் 30, 2017 (தணிக்கை செய்யப்படாதது)	முடிவடைந்த ஆறுமாதங்கள் செப்டம்பர் 30, 2018 (தணிக்கை செய்யப்படாதது)	முடிவடைந்த ஆறுமாதங்கள் செப்டம்பர் 30, 2017 (தணிக்கை செய்யப்படாதது)	முடிவடைந்த ஆண்டு மார்ச் 31, 2018 (தணிக்கை செய்யப்பட்டது)
1	மொத்த செயல்பாடுகள் மூலம் வருமானம்	17,159	17,569	12,965	34,728	26,934	55,558
2	இக்காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரிக்கு முன். சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு முன்)	2,104	2,373	1,397	4,477	2,791	5,452
3	இக்காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்) (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்)	2,104	2,305	1,371	4,409	2,677	5,264
4	இக்காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் / (நஷ்டம்) (சாதாரண மற்றும் அசாதாரண இனங்களுக்கு பின்)	1,429	1,539	929	2,968	1,836	3,715
5	இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் [இக்காலத்திற்கான வருமானம் உள்ளடக்கிய லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்)]	1,440	1,549	908	2,989	1,794	3,756
6	சமபங்கு மூலதனம்	1,539	1,539	1,539	1,539	1,539	1,539
7	பங்கு விகித ஈட்டுத்தொகை (ஒவ்வொரு பங்கு ரூ.10/-) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்)						
	அ) அடிப்படை	9.28	10.00	6.04	19.28	11.93	24.13
	ஆ) குறைமதிப்பு	9.28	10.00	6.04	19.28	11.93	24.13

குறிப்பு :

1. மேற்குறிப்பிடப்பட்டவைகள் 2015-ம் வருடத்திய SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிமுறைகளில் 33-வது விதிமுறையின் கீழ், பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு மற்றும் ஆறுமாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் தேர்ந்தெடுக்கப்பட்டவைகள் ஆகும். காலாண்டு மற்றும் ஆறுமாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் கம்பெனியின் www.esabindia.com என்ற இணையதளத்திலும், பங்கு வர்த்தக நிறுவனத்தின் BSE Limited மற்றும் NSE India Limited என்ற இணையதளத்திலும் காணலாம்.

சென்னை
30 அக்டோபர், 2018

Your Partner in Welding & Cutting
Visit our website : http://www.esabindia.com

ஈசாப் இந்தியா லிமிடெட்டுக்காக
ரோஹித் கம்பீர்
மேலாண்மை இயக்குனர்